**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer, Pudukkottai.

Thiruvalluvar Aandu 2057 Parapava Varudam Vaikasi Thingal 15th day

Friday the 29th day of May 2026

Calender Case No.74/2021
CNR No.TNPD01-001322-2021

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | - |
| 2. | Name of the Police Station and the crime number of the offence | NIB – CID Sivagangai P.S. in Cr.No.10/2021 u/s 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 |
| | **Description of the accused** | |
| 3. | Name | Raja |
| 4. | Father's Name /Husband Name | Vellaikannu |
| 5. | Occupation | Coolie |
| 6. | Residence | Oorani Theru, Veerapatti, Keelapoongudi Via, Sivagangai. |
| 7. | Age | 49 |
| | **Date of** | |
| 8. | Occurrence | 24.03.2021 |
| 9. | Complaint | 24.03.2021 |
| 10. | Apprehension | 24.03.2021 |
| 11. | Release on bail | 17.04.2021 |
| 12. | Commitment | - |
| 13. | Commencement of Trial | 18.02.2026 |
| 14. | closure of trial | 27.05.2026 |
| 15. | Sentence or order | 29.05.2026 |
| 16. | Service of copy of Judgment or finding on accused. | 29.05.2026 |
| 17. | Explanation of delay | -- |

| | | |
|---|---|---|
| 18. | Miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | --- |
| 19. | Examination in Chief and cross-examination of a witness: | **Chief** **Cross**<br>1) 18.02.2026 – 18.02.2026<br>2) 25.05.2026 – 25.05.2026<br>3) 26.05.2026 – 26.05.2026 |
| | Examination of the Accused u/s 313 of the Code. | 27.05.2026 |
| 21. | Abscondence of an accused an his appearance/production: | --- |
| 22. | Victim Compensation Order: | ----- |
| 23. | The Period of remand of the Accused | 24.03.2021 – 17.04.2021 |
| 24. | Grant of stay by superior Courts and the results thereof; and | -- |
| 25. | Date of filing of the complaint/Final report in the Court | 08.10.2021 |

இவ்வழக்கு 27.05.2026-ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவருக்காக அரசு தரப்பு சிறப்பு பொது வழக்கறிஞர் திரு. எம். பாலசுப்பிரமணியன், M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.மணிகண்டன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,

## <u>தீர்ப்புரை</u>

கடந்த 24.03.2021-ம் தேதி 14.00 மணிக்கு சிவகங்கை மாவட்டம் கீழப்பூங்குடி பஸ் ஸ்டாப் அருகே இவ்வழக்கின் எதிரி வெள்ளை நிற

சாக்கு பையில் அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருளான பூ, இலை, காம்பு, விதைகளுடன் கூடிய 1.300 கிகி எடை கொண்ட கஞ்சாவை எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக அதன் மூலம் எதிரி மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் NIB – CID சிவகங்கை காவல் ஆய்வாளரால் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல் அனைத்தும், எதிரிக்கு இலவசமாக குவிமுச பிரிவு 207–ன் கீழ் வழங்கப்பட்டன.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டும், எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 – ஆம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01–ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரி குற்றச்சாட்டை மறுத்து வழக்கில் விசாரணை கோரியுள்ளார்.

4. இவ்ழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அதசாஆ.1 முதல் அதசாஆ.13 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் சா.பொ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறியவரும் அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு–**

(i) அசா.1 திரு.ராஜசெல்வி தனது சாட்சியத்தில் கடந்த 24.03.2021–ம் தேதி சிவகங்கை போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவின் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த போது தான் நிலைய அலுவலில் இருக்கும்போது காவல் ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவலாளி தொலைப்பேசி மூலமாக ராஜா, வீரப்பட்டியை சேர்ந்தவர் கீழப்பூங்கொடி பஸ் ஸ்டாப்பில் கஞ்சா விற்பதாகவும் தாங்கள் வந்தால் அடையாளம் காட்டுவதாகவும் கூறியதன் பேரில் காவல் ஆய்வாளர் அவர்கள் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து அவர்களது உத்தரவின் பேரில் நிலைய அலுவலில் இருந்த தான் சிறப்பு சார்பு ஆய்வாளர் ரவிசந்திரன் தலைமை காவலர் சரவணன், தலைமை காவலர் sridhar ஆகியோருடன் 13.00 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு தகவலாளி சொன்ன இடமான கீழப்பூங்கொடி பஸ் ஸ்டாண்ட்க்கு 13.30 மணிக்கு சென்றடைந்தோம் என்றும், தகவலாளியை சந்தித்து விட்டு போதைப்பொருள் தடுப்பு பிரிவு சோதனை செய்து கொண்டிருக்கும் போது 14.00 மணிக்கு அது வழியாக வந்த நபரை தகவலாளி அடையாளம் காட்டி செல்ல தாங்கள் அவரை பார்த்து தாங்கள் போதைப்பொருள் தடுப்பு பிரிவு காவலாளிகள் என்று சொல்லி அவர் பெயர் விலாசம் கேட்க ராஜா, வயது 46/21, த/பெ வெள்ளக்கண்னு, ஊரணி தெரு, வீரப்பட்டி கீழப்பூங்கொடி வழி சிவகங்கை மாவட்டம் என்று கூறியவரிடம் தாங்கள் கஞ்சா வியாபாரம் செய்வதாக தகவல் வந்தது என்று கூறி உங்களை சோதனை இடவேண்டும், அருகிலுள்ள நீதித்துறை நடுவரிடமோ, அரசு அதிகாரிகளிடம் அழைத்து செல்வதாக கூறியதற்கு அவர் அங்கெல்லாம் வரஇயலாது என மறுத்து காவல் அதிகாரியான நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதன் பேரில் 14.30 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அதில் பொது மக்கள் கையெழுத்து போட

முன்வராததால் காவல் ஆய்வாளர் கூறியதன் பேரில் தானும் தலைமை காவலர் சரவணனும், ராஜாவும் சோதனை சம்மத கடிதத்தில் கையெழுத்திட்டோம் என்றும், அந்த சோதனை சம்மத கடிதம் அ.த.சா.ஆ. 1 என்றும், அவர் கொண்டு வந்த வெள்ளை நிற சாக்குப்பையை பிரித்து பார்த்த போது பூ, மொட்டு, காம்பு, இலைகளுடன் கூடிய கஞ்சா இருந்தது என்றும், தாங்கள் கொண்டு சென்ற தராசில் வைத்து எடை போட்டதில் 1 கிலோ 300 கிராம் கஞ்சா இருந்தது என்றும், 13.00 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து தானும் த.கா சரவணனும், ராஜாவும் கையெழுத்திட்டோம் என்றும், அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.2 என்றும், அதிலிருந்து பகுப்பாய்விற்காக 25 கிராம் வீதம் 2 பாக்கெட் காக்கி கவரில் கட்டி அதற்கு NIB SVG Seal வைத்தும் அதற்கு S1, S2 என குறியீடு செய்து மீதமுள்ள 1250 கிராம் கஞ்சாவை NIB SVG Seal வைத்தும் அதற்கு P1 என குறியீடு செய்து 15.15 மணிக்கு எதிரியிடம் கஞ்சா யாரிடம் வாங்கியது என விசாரிக்கும் போது மதுரை மேலூரை சேர்ந்த அடையாளம் தெரிந்த பெயர் விலாசம் தெரியாத நபரிடம் கஞ்சா வாங்கியதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் சாட்சியாக தானும், சரவணனும் கையொப்பம் செய்தோம் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1–வது சாட்சி கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த 1–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ. 3 என்றும், 15.30 மணிக்கு எதிரிக்கு கைது அறிவிப்பு கொடுத்து கைது செய்து அதில் சாட்சிகளாக தானும், த.கா. சரவணனும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த கைது அறிவிப்பு அ.த.சா.ஆ. 4 என்றும், 16.00 மணிக்கு எதிரி மற்றும் தடய சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண் 10/2021 சட்டப்பிரிவுகள் 8(c) r/w

20(b)(II)B NDPS Act–ன்படி வழக்கு பதிவு செய்ய காவல் அதிகாரிக்கு உதவியாக இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அசா.2 திரு.சரவணன் தனது சாட்சியத்தில் கடந்த 24.03.2021 அன்று சிவகங்கை போதை பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவில் தலைமை காவராக பணிபுரிந்து வந்தபோது அன்று மதியம் சுமார் 12.30 மணியளவில் ஆய்வாளர் அவர்களுக்கு போன் மூலம் ரகசிய தகவல் வந்தவுடன் ஆய்வாளர் மற்றும் தானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் ரவீந்திரன் மற்றும் தலைமை காவலர் ஸ்ரீதரன், பெண் தலைமை காவலர் ராஜசெல்வி ஆகியோர் கீழப்பன்குடி அருகிலுள்ள வீரப்பட்டி என்ற கிராமத்தில் தாங்கள் தங்கள் போலீஸ் பார்ட்டியுடன் அங்கு இருந்தோம் என்றும், தங்களுக்கு தகவல் கொடுத்தவர் கஞ்சா வியாபாரி ராஜா என்பவர் தங்களுக்கு அடையாளம் காண்பித்து சென்று விட்டார் என்றும், ராஜா என்பவரை விசாரித்தபோது அவர் கையில் வைத்திருந்த வெள்ளை பையை சோதனை செய்தபோது அதில் சுமார் 1.300 கிகி எடையுள்ள கஞ்சா, பூ, இலை, விதை ஆகியவை இருந்தது சோதனையில் தெரிய வந்தது என்றும், அவரை போதை பொருள் நுண்ணறிவு பிரிவு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து சுமார் 3.00 மணியளவில் அத்தாட்சி தயார் செய்து அதில் போலீஸ் சாட்சிகளான தானும், தலைமை காவலர் ராஜசெல்வியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், அத்தாட்சியிலுள்ள 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், எதிரி மீது ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை தயார் செய்ய தான் உதவியாக இருந்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(iii) அசா.3 திருமதி.ஹேமலதா தனது சாட்சியத்தில் கடந்த 24.03.2021–ம் தேதி சிவகங்கை NIB CID காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 12.30

மணிக்கு தகவலாளி போனில் சொன்ன தகவல் சிவகங்கை மாவட்டம் கீழ்பூங்குடி பஸ் ஸ்டாப் அருகே வீரப்பட்டியை சேர்ந்த வெள்ளக்கண்ணு, மகன் ராஜா என்பவர் கஞ்சா விற்பனை செய்ததாக கொடுத்த தகவலை தான் பெற்று எழுத்து பூர்வமாக பதிவு செய்து தனது உடனடி மேல் அதிகாரிக்கு தகவலை தெரிவித்தேன் என்றும், தான் பதிவு செய்த தகவல் அதசாஆ.5 என்றும், அதன் பேரில் சிறப்பு சார்பு ஆய்வாளர் ரவிசந்திரன், தலைமை காவலர்கள் ராஜசெல்வி, சரவணன், ஸ்ரீதரன் ஆகியோருடன் வழக்கிற்கு தேவையான உபகரங்ணகளை எடுத்துக் கொடுத்து 13.00 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு தகவலாளி சொன்ன இடமான கீழ்பூங்குடி பஸ் ஸ்டாப் அருகே 13.30 மணிக்கு தகவலாளியை சந்தித்து விட்டு கண்காணித்தபோது 14.00 மணிக்கு வெள்ளை நிற சாக்கு பையுடன் வந்து கொண்டிருந்த நபரை தகவலாளி தன்னிடம் அடையாளம் காட்டி செல்ல அவரை தாங்கள் நிறுத்தி விசாரிக்க தனது பெயர் ராஜா த/பெ.வெள்ளக்கண்ணு, வீரப்பட்டி என்று தெரிவித்தார் என்றும், அவரிடம் தங்களை அறிமுகம் செய்து கொண்டு கஞ்சா விற்பதாக தகவல் வந்துள்ளது என்றும் அதனால் தங்களையும் தங்களது உடைமைகளையும் சோதனை செய்ய நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் அழைத்து சென்று சோதனை செய்ய கேட்க தங்களுக்கு உரிமையுள்ளது என்று கேட்டதற்கு வேறு எங்கும் என்னை அழைத்து செல்ல வேண்டாம் என்றும் காவல் ஆய்வாளர் தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறி சோதனை சம்மத கடிதத்தில் 14.30 மணிக்கு தான் தயார் செய்த சோதனை சம்மத கடிதம் எதிரி கையொப்பம் செய்தார் என்றும், அவருக்கு சோதனை சம்மத கடிதம் கொடுக்கப்பட்டது என்றும், அதில் சாட்சிகளாக ராஜசெல்வி, சரவணன் ஆகியோர் கையொப்பம்

செய்தார்கள் என்றும், அவர் கையில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை சோதனை செய்தபோது அதில் கஞ்சா, இலை, பூ, காம்பு உடன் கூடிய கஞ்சா இருந்தது என்றும், அதனை தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்க்க அதன் எடை 1.300 கிகி இருந்தது என்றும், 15.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலமாக சாட்சிகள் ராஜசெல்வி, சரவணன் ஆகியோர் முன்னிலையில் கஞ்சாவை கைப்பற்றினேன் என்றும், மேற்படி பகுப்பாய்விற்காக கைப்பற்றப்பட்ட கஞ்சாவினை விற்று தலா 25 கிராம் விதம் இரண்டு மாதிரிகள் எடுத்து அதற்கு S1, S2 என்று பெயரிட்டு அதற்கு SHO சீல் வைத்தேன் என்றும், மீதமுள்ள கஞ்சா 1.250 கிகி கஞ்சாவிற்கு NIB CID சீல் வைத்து P1 என்று குறியீடு செய்து விபரல் லேபில் ஒட்டி சாட்சிகள் மற்றும் எதிரிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், கஞ்சா விற்ற காரணம் கூறி எதிரி ராஜா என்பவருக்கு 15.30 மணிக்கு கைது அறிவிப்பு கொடுத்து கைது செய்தேன் என்றும், அந்த கைது அறிவிப்பில் ராஜசெல்வி, சரவணன் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள் என்றும், 16.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய தன்னிடம் எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதனை சாட்சிகள் சரவணன், ராஜசெல்வி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், எதிரி மற்றும் தடய சொத்துக்களுடன் 16.00 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண்.10/2021 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) NDPS Act–ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.6 என்றும், எதிரியை தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், இவ்வழக்கில் தான் மேற்கொண்ட சோதனை குறித்து 24.03.2021–ம் தேதி தனது உடனடி மேல்

அதிகாரியான காவல் துணை கண்காணிப்பாளர் NIB CID மதுரை பொறுப்பு அவர்களிடம் பிரிவு 57 NDPS Act–ன்படியான விரிவான அறிக்கையை சமர்ப்பித்தேன் என்றும், அந்த விரிவான அறிக்கை அதசாஆ.7 என்றும், கைப்பற்றப்பட்ட தடய சொத்தினை படிவம் 95–ன் மூலமான நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்றும், அதற்கான RP No.71/2021 என்றும், அதற்கான படிவம் 95 அதசாஆ.8 என்றும், நீதிமன்ற உத்தரவின்படி கைப்பற்றப்பட்ட தடய சொத்தின் மாதிரியை பகுப்பாய்வுக்கு என நீதிமன்றத்தின் மூலம் பகுப்பாய்வு செய்ய ராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தும் ஆய்வு முடிந்த பின் பகுப்பாய்வு அறிக்கை பெற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கான பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.9 என்றும், பின்பு சாட்சிகள் 1 முதல் 6 வரையுள்ளவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் தான் பணி மாறுதலில் சென்று விட்டதால் கவிதா ஆய்வாளர் சாட்சிகளை விசாரித்தும் ஆவணங்கள் அடிப்படையில் இவ்வழக்கில் 16.08.2021 அன்று எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், நீதித்துறை நடுவர் அவர்கள் சான்றொப்பம் செய்த சொத்து விவர பட்டியல் Annexure I அதசாஆ.10 என்றும், Annexure II அதசாஆ.11 என்றும், புகைப்படம் (எண்ணிக்கை 1) அதசாஆ.12 என்றும், பகுப்பாய்வுக்கு பயன்படுத்தப்பட்டு மீதமுள்ள கஞ்சா இந்நீதிமன்ற உத்தரவுப்படி Drugs disposal Committee மூலம் அழிக்கப்பட்டது என்றும், அதற்கான CRlmp No.4290/2024, Dt.09.08.2024 அதற்கான CRlmp No.4290/2024 உத்தரவு நகல் அதசாஆ.13 என்றும், நீதிமன்றத்தில் கஞ்சாவினை அழிப்பதற்கு முன்பாக எடுக்கப்பட்ட CS1 Sample ganja சாபொ.1 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து வினாக்களாக தொகுத்து குவிமுச 313 (1)(b) பிரிவின் கீழ் வினவ, எதிரி அவற்றை "பொய் வழக்கு" என்று கூறினார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் இல்லையென முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில், எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01– ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் எந்தவிதமான தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதா? என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

9. அரசு தரப்பு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில், எதிரி மீதான u/s 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 ன் படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசிலிக்கப்பட்டது.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரைப்பில், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் NDPS சட்ட

வழிவகைகள் முறையாக பின்பற்றப்படாமலும் எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், ஆகவே எதிரியை வழக்கிடை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் அசா1 ஆக திருமதி. ராஜசெல்வி சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அசா1 மூலமாக அசாஆ1 முதல் 4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா2 ஆக தலைமை காவலர் சரவணன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அசா3 ஆக காவல் ஆய்வாளர் திருமதிஹேமலதா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார், அவர் மூலமாக அசாஆ5 முதல் அசாஆ13 மற்றும் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. அரசு தரப்பில் அசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜசெல்வி என்பவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில் 24.03.2021–ம் தேதியன்று காவல் ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் 24.03.2021 –ம் தேதி 13.00 மணிக்கு புறப்பட்டு கீழபூங்குடி பஸ்ஸ்டாப் அருகில் கண்காணித்தபோது 14.00 மணிக்கு தகவலாளி ராஜாவை அடையாளம் காண்பிக்க காவல் ஆய்வாளர் பிடித்தும், அவரிடம் அவரை சோதனை செய்ய நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்யலாமா என கேட்டதற்கு எதிரியின் ஒப்புதலின் பேரில் சோதைனை செய்ததாகவும், அதற்கான சோதனை சம்மத கடிதம் அசாஆ1 என்றும் முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக

கவனமாக பரிசீலிக்கையில் NDPS சட்டப்பிரிவு 50 ன் விதிமுறையை அசா3 முறையாக பின்பற்றியுள்ளது தெளிவாக தெரியவருகிறது.

13. மேலும், அசா1 தன்னுடைய சாட்சியத்தில் எதிரியிடமிருந்து 1.300 கிகி கஞ்சாவை கைப்பற்றியதாகவும் , அவரை 15.30 மணிக்கு கைது செய்தும் 13.00 மணிக்கு அத்தாட்சி தயார் செய்தும் 1.300 கிகி கஞ்சாவை அசாஆ 2 அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் எதிரிக்கு அசா3 காவல் ஆய்வாளர் சோதனை சம்மத கடிதம் கொடுத்துள்ளது தெரியவருகிறது.

14. மேலும், அசா2 ஆக இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள தலைமை காவலர் சரவணன் தன்னுடைய சாட்சியத்தில் நடந்த சோதனை குறித்தும், எதிரியை பிடித்தும், சோதனை செய்தும், எதிரி விற்பனைக்கு வைத்திருந்த 1.300 கிகி கஞ்சாவை காவல் ஆய்வாளர் ஹேமலதா தலைமையில் கைப்பற்றியும் சட்ட நடவடிக்கை அசா3 ஆல் மேற்கொண்டுள்ளது குறித்து அசா1–ன் சாட்சியத்திற்கு ஒத்துரைப்பாக அசா2 எதிரியை குற்றப்படுத்தி குறிப்பிட்டு சாட்சியம் முன்வைத்துள்ளது தெரியவருகிறது.

15.மேலும் அசா3 ஆக இவ்வழக்கில் திருமதி.ஹேமலதா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் Raiding and Seizing Officer ஆவார். அவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் 24.03.2021–ம் தேதியன்று பகல் 12.30 மணிக்கு தான் NIB CID Ramnad காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது தனக்கு கிடைத்த தகவலின்பேரில் அசாஆ 5 தகவலை பெற்றும் கிடைத்த தகவலை தனது உயர் அதிகாரிக்கு

தெரிவித்தும், அனுமதி பெற்றும் காவல் ஆய்வாளர் ஆகிய ஹேமலதா தனது தலைமையில் தலைமைக் காவலர் சரவணன், ராஜசெல்வி ஆகியோர்களுடன் கீழபூங்குடி பஸ்ஸ்டாப் அருகில் கண்காணித்தபோது பகல் 14.00 மணிக்கு எதிரியை தகவலாளி அடையாளம் காட்டியதாகவும் , இவ்வழக்கின் எதிரியை பிடித்தும், சோதனை செய்ய எதிரிக்குள்ள உரிமையை எடுத்துக்கூறியும் அவர் தாங்களே சோதனை செய்யலாம் என கூறியதால் சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும், சோதனை செய்தும், அதில் மொத்தம் 1.300 கிகி கஞ்சாவை எதிரி வெள்ளைநிற சாக்கு பையில் வைத்திருந்ததை கைப்பற்றியும், எதிரிக்கு கைது நமூனா கொடுத்தும், கைப்பற்றிய கஞ்சாவிலிருந்து மாதிரிக்கென பகுப்பாய்வுக்கு எடுத்தும் பின்னிட்டு எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், பின்னர் எதிரியையும் தடய சொத்தையும் காவல் நிலையம் கொண்டு வந்தும் NIB CID ramnad காவல் நிலைய குற்ற எண்.10/2021 ச/பி 8(c)r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 ன் கீழ் அசாஆ 6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், வழக்கு கோப்பினை பரிசீலித்தும், சாட்சிகளை விசாரித்தும் இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் , முன் வைத்துள்ளது குறித்து மிக கவனமாக பரிசீலிக்கையில் அசாஆ 1 சோதனை சம்மத கடிதத்தின் பிரகாரம் NDPS சட்டப்பிரிவு 50 விதிமுறைகளுக்கு உட்பட்டு காவல் ஆய்வாளர் எதிரியிடம் சோதனை மேற்கொண்டுள்ளது தெரியவருகிறது.

16. மேலும், இவ்வழக்கில் தடய சொத்தினை படிவம் எண்.95–ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ள அசா3 காவல் ஆய்வாளர் ஹேமலதாவின் சாட்சியம் மற்றும் அதற்கு ஒத்துரைப்பாக அசா1–ன் சாட்சியமும், அசா2 ன் சாட்சியமும் ஒன்றாக ஒருசேர கோர்வையாக

உள்ளது. ஆகவே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள காவல் ஆய்வாளர் அசா3 ஹேமலதாவின் சாட்சியத்தினையும், அசாஆ 9 பகுப்பாய்வு அறிக்கையையும் , மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா3 இவ்வழக்கின் எதிரியிடமிருந்து கைப்பற்றிய 1.300 கிகி தாவர பொருள் கஞ்சா என்பது அரசு தரப்பில் அறிவியல் பூர்வமாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

17. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில் தடய சொத்தின் மாதிரி நீதித்துறை நடுவர் முன்புக்கு NDPS சட்டப்பிரிவு 52(A) –ன் பிரகாரம் மாதிரி எடுத்திருக்காதது அரசு தரப்பு வழக்கினை பாதிக்கக்கூடிய ஒன்றாக உள்ளதாக முன் வைத்துள்ள வாதுரைப்பு குறித்து மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா3 திருமதி.ஹேமலதா காவல் ஆய்வாளர் தன்னுடைய சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரியிடமிருந்து அசாஆ 1 சோதனை சம்மத கடிதம் கொடுத்தும் , சோதனை செய்தும், எதிரியிடமிருந்து சா.பொ.1 –ல் கண்ட கஞ்சாவை கைப்பற்றியுள்ளதால் அது வகைக்கு எதிரியிடமிருந்து கையும் மெய்யுமாக கஞ்சா அசா3 ஆல் கைப்பற்றப்பட்டுள்ளது அசா1 முதல் அசா3 –ன் சாட்சியத்தின் பிரகாரம் ஒன்றாக ஒருசேர ஒத்துரைக்கப்பட்டும் இயற்கையாகவும், கோர்வையாகவும் சாட்சியம் முன் வைக்கப்பட்டுள்ளதால் எதிரி சம்பவ சமயம், சம்பவ இடத்தில் கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்துள்ளது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே நீதித்துறை நடுவர் முன்புக்கு மாதிரி அசாஆ 10 Annexure – I, அசாஆ 11 Annexure – II எடுக்கப்பட்டு உள்ளதால் நடந்த சம்பவம் உண்மை அல்ல என கருத இயலாது. ஆகவே, எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரைப்பு சட்டப்படிக்கும்,

நியாயப்படிக்கும் ஏற்கக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை என இந்நீதிமன்றம் தாழ்மையுடன் கருதுகிறது.

18. மேலும் அரசு தரப்பில் முன் வைத்துள்ள சாட்சியத்தின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 54–ன் பிரகாரம் எதிரி , சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் 1.300 கிகி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்துள்ளது அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி எளிதில் அனுமானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது அந்த அனுமானத்தினை மறுத்து உரைக்கும் விதமாக இவ்வழக்கில் எதிரி தரப்பில் NDPS சட்டப்பிரிவு 54 ன் பிரகாரம் எவ்வித சாட்சியமும் சான்றாவணமும் எதிரியால் முன்னிடப் பட்டிருக்கவில்லை.

19. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில், எதிரி மீதான NDPS சட்டப்பிரிவு 8(c)r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 –ன் கீழான குற்றச்சாத்து அரசு தரப்பில் அசா1 முதல் அசா3 சாட்சிகளின் சாட்சியம் மற்றும் அசாஆ1 முதல் அசாஆ13 வரையிலான சான்றவாணங்களின் பிரகாரமும் சா.பொ.1– ன் பிரகாரமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

20. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரி NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21. ஆகவே எதிரி சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிக்கு

வழங்க வேண்டிய தண்டனை குறித்து எதிரியிடம் வினவ, எதிரி கீழ்கண்டவாறு கூறினார்.

| |
|---|
| எனது வயது 55 ஆகும். என்னை மன்னித்து விடுதலை செய்ய வேண்டும். |

ஆகவே, எதிரியின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2021–ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும் , எதிரி தவறாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார் என்பதாலும் எதிரியின் கோரிக்கையினை ஏற்றும், எதிரிக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

22. முடிவாக எதிரி 1985–ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9–01 ச–பி 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 –ன் படி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டும் எதிரிக்கு 25 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் ரூ. 10,000/– விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், எதிரி ஏற்கனவே சிறையில் இருந்து வந்த காலத்தை குவிமுச பிரிவு 428–ன் படி கழித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.
எதிரி 24.03.2021 முதல் 17.04.2021 வரை சிறையில் இருந்துவந்துள்ளார் .

எதிரிக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/– ஆகும்.

23. இவ்வழக்கில் ஆர்பிஎண்.71/2021–ல் சா.பொ.1 மாதிரி கஞ்சாவை பொறுத்து இந்நீதிமன்ற சிஆர்எம்பி 4290/2024 நாள் 09.08.2024–ம் தேதியன்று ஏற்பட்ட உத்தரவின்படிக்கு அழித்திருப்பின், அழித்தது போக மீதமுள்ள கஞ்சா இருப்பின் அதனை இவ்வழக்கில் மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ பின்னர் உரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு Drugs Disposal Committee மூலம் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால், சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மே மாதம் 29–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.05.29 17:18:17 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

**சாட்சி பட்டியல்–**

**அரசு தரப்பு சாட்சிகள்–**

அ.சா.1 – திருமதி.ராஜசெல்வி, சிறப்பு சார்பு ஆய்வாளர்.

அ.சா.2 – திரு. சரவணன், தலைமை காவலர்.

அ.சா.3 – திருமதி. ஹேமலதா, காவல் ஆய்வாளர்.

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

அ.சா.ஆ.1 – சோதனை சம்மத கடிதம்

அ.சா.ஆ.2 – அத்தாட்சி

அ.சா.ஆ.3 – ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அசா.1–ன் 1–வது கையொப்பம் மட்டும்

அ.சா.ஆ.4 – கைது அறிவிப்பு

அ.சா.ஆ.5 – தகவல்

அ.சா.ஆ.6 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.7 – விரிவான அறிக்கை

அ.சா.ஆ.8 – படிவம் 95

அ.சா.ஆ.9 – பகுப்பாய்வு அறிக்கை

அ.சா.ஆ.10– Annexure I

அ.சா.ஆ.11– Annexure II

அ.சா.ஆ.12– புகைப்படம் (எண்ணிக்கை 1)

அ.சா.ஆ.13– Crlmp No.4290/2024, dated 09.08.2024 உத்தரவு நகல்

**அரசு தரப்பு சான்றுப்பொருள்** –

சா.பொ.1 – மாதிரி கஞ்சா

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்**–இல்லை.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.05.29 17:18:24 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்

அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

பின்குறிப்பு

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருக்கிறார்.
2. சாட்சிகள் யாரும் விசாரணையில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. எதிரிக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

Fair/Draft
Judgment in C.C.74/2021
Dt.29/05/2026.